ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

இம்மைப்பயனையளிக்கும் கர்மங்களிலேனும், மறுமைப்பயனையளிக்கும் கர்மங்களிலேனும் நல்லது பொல்லாதவைகளை சுயமாகவே தெரிந்துகொண்டு பிரவிருத்திப்பது புத்திமானுக்கும் முடியாதகாரியம். ஆனால் அவைகளில் நீண்டகாலத்துப் பழக்கமும், அவைகளின் பயனை நேருக்கு நேராக அனுபவித்த அனேகர்களுடைய பரிச்சயமும், அவர்கள் செய்யும் உபகாரமும் உள்ளவர்களுக்குத்தான் அது சுலபமாய் முடியும். சின்ன காரியங்களிலும் இப்படியானால் பெரிய காரியங்களில் கேழ்க்கவேண்டியதில்லை. லௌகிககாரியங்களில் புதிதாக ஒருவன் பிரவிருத்தி செய்வானாயின், பல தேசங்களில் சஞ்சரித்து, அத்தேசங்களின் சுவபாவத்தையும், அத்தேசவாஸிகளின் குணாதிகளையும் பலதடவைகளில் அனுபவித்தவன் பிரவிருத்தி செய்வதுபோலாகாது. அதற்காக புதிதாக வேலை செய்யப்புகும் மனிதன் நாட்டுப்பழக்கமுள்ளவன் மூலமாக உலக நடவடிக்கைகளை முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். இதுபோல் பாரலௌகிக கர்மங்களில் பிரவிருத்திக்கக் கருதியவன் தானாகவே ஒன்றையும் தீர்மானிக்க முடியாது. முதலாவது தர்மாதர்மங்களையே உள்ளபடி நிதானிக்க முடியாது. தானாகவே தர்மாதர்மாதிகளை தீர்மானித்துவிடத் துணிந்த தற்காலத்திய சிலர், எவ்வித அதர்மப் பிரவிருத்தியாயினும் சரி, அதெல்லாம் முன்காலத்தில் தர்மமென்றே ஆதரிக்கப்பட்டு வந்ததாகவும், சுருதி ஸ்மிருதி புராணாதிகளும் அதற்கே ஒத்திருப்பதாகவும், மத்தியகாலத்தில் ஏதோ காலதோஷத்தால் அது மாறிவிட்டதாகவும், அதையே தற்போது நிலைநாட்ட திருத்தக்காரர்கள் முயன்றது பாராட்டத்தக்கதென்பதாகவும் ஊரூராய்ச் சென்று உபதேசித்து வருகிறார்கள். அப்படித் தீர்மானிக்கப்பட்டது தர்மமாய்விடுமா ? அல்லது அவர்கள் தர்மமில்லையென்று தீர்மானித்து தர்மமில்லாமற்போய்விடுமா? ஆகவே தர்மாதர்ம ஸ்வரூபத்தை மீமாம்ஸாநியாயங்களைக்கொண்டு விசாரம்செய்து தீர்மானம்செய்திருப்பவர்கள் மூலமாகவே முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். அப்படியில்லாமல் கண்டபேர் பேச்சைக் கேட்டு எதையோ அனுஷ்டித்துவிட்டால் அதெல்லாம் தர்மமாய்விடாது. அதற்காக தர்மத்தில் பழகியவர்கள் சொற்படி நடந்தாற்றான் பாரலௌகிக பலன் கிடைக்கும். தற்காலத்தியவர் சிலர் கூடி ஒரு முடிவு செய்துவிட்டதற்காக தர்மாதர்மபயனாக உலகத்தைப் படைத்த பரமேசுவரனும், ஜகத்வியாபாரத்தில் அவனால் நியமிக்கப்பட்ட சூரியன், சந்திரன், அக்னி, வாயு, யமன் முதலிய ஆதிகாரிகபுருஷர்களும் தாங்கள் முன் செய்திருந்த வியவஸ்தையை மாற்றிவிடமாட்டார்கள். அவர்கள் தீர்மானித்திருப்பது எப்பொழுதும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். இதைத் தீர்க்காலோசனைசெய்து தெரிந்துகொண்டு பாரலௌகிக சிரேயஸ் ஸாதனங்களில் யாவரும் பிரவிருத்திப்பார்களாக.

பத்திராதிபர்.

உ

ஆர்யதர்மம்.

சுக்ல-௵ தை-௴ ௧௨

வரப் பிரேஷணம்.

விவாஹம் செய்துகொள்ளக் கருதிய வரன் விரதஸமாவர்த்தனம் செய்துகொண்டபின் தனக்கு அநுரூபமாயும் அநுகூலமாயுமுள்ள கன்னிகையைத்தேடி கன்னிகையின் தாய்தந்தைமுதலிய பந்துக்களிடம் சென்று வரித்து நிச்சயப்படுத்திக்கொண்டுவருவதற்காக தனது ஸ்நேஹிதர்களைச் சேர்த்து அனுப்பவேண்டும். அதற்காகவே மந்திரப்பிரச்னத்தில் ஆதியில் இரண்டு மந்திரங்கள் இருக்கின்றன. அந்த மந்திரங்களைச் சொல்லி அவர்களை அனுப்ப வேண்டும். இவ்விதம் ஆபஸ்தம்ப முனி விதித்துள்ளார். இவ்விதம் அனுப்புவதற்குத் தான் வரப்பிரேஷணம் என்று பெயர். கன்னிகையை வரணம் செய்கின்றவர்களை வரிக்க வேண்டியவர்களான கன்னியாபந்துக்களிடம் அனுப்புவதால் அப்பெயர் அதற்குப் பொருத்தமுடையதே. அதிலிருந்து தெரிகிறதென்னவென்றால்— "ஒருபையன் ஒருகன்னிகையைவிவாஹம்செய்துகொள்ள நினைத்தால் தானாகவே பார்த்து நிச்சயித்துக்கொண்டுவிடக் கூடாது. ஏனெனில், அந்தப்பையனுக்கு ஜனங்களுடைய ஸ்வபாவத்தை அறியும்சக்தி அவனது பெரியோருக்கும்போல் இருக்காதல்லவா! இவன் ஒருவாறு ரூபத்தைக்கண்டே மோஹித்துவிடலாம். குணம், சீலம் முதலியன அக்கன்னியிடம் குறைவாய் இருக்கலாம். அவைகளைத் தெரிந்துகொள்ள இந்தப்பையனால் முடியாது. அக்கன்னிகையின் பெற்றோரையும் மற்ற சுற்றத்தாரையும் பலவிதத்திலும் தெரிந்துகொண்ட வயதான பந்துக்களுக்குத்தான் தெரிந்துகொள்ளமுடியும். இது யாரும் ஒப்புக்கொள்ளக் கூடியது. அன்றியும் ஒரு பெண்ணைத் தண்ணீர்த் துறையிலோ, பள்ளியறையிலோ பார்த்த பையனுக்கு அக்கன்னியின் குலத்தின் பாரம்பரையாய்த் தொடர்ந்துவந்த குஷ்டம், க்ஷயம்

முதலிய தொத்து வியாதிகளைத் தெரிந்துகொள்ள முடியவேமுடி யாது. ரோகிக் குலத்துப் பெண்ணைக் கலியாணம் செய்யக்கூடா தென்று மன்வாதி ஸ்மிருதிகளிலும் வைத்திய நூல்களிலும் கூறப் படுகின்றது. அன்றியும் பிராமணர்களுக்கு ஸமமான கோத்திரம் பிரவாமுள்ள பெண்ணை விவாஹம் செய்யக்கூடாதென்று நிஷேத மிருக்கிறது. இது அந்தப்பெண்ணைப்பார்த்தால் மாத்திரம் தெரி ந்துகொள்ள முடியாது. அதற்கும் பெரியோர்களை விசாரித்துத் தான் ஆகவேண்டும். இக்கருத்தை ஆபஸ்தம்ப முனிவர்- 'பந்து சில லக்ஷண ஸம்பன்னாம்' என்பதாதி ஸூத்திரங்களில் வெளியிட் டிருக்கிறார். இவ்வாறு புருஷனே பெரியோர்களான பந்துக்களைக் கொண்டு ஸூக்ஷ்ம விஷயங்களைத் தெரிந்துகொண்டபிறகுதான் விவாஹம் செய்துகொள்ள நிச்சயிக்கவேண்டுமென்று கூறியிருக் கும்பொழுதுஸ்திரீகளுக்குக்கேழ்க்கவேவேண்டாம். இப்படிசாஸ் திர அபிப்பிராயமிருக்கும்பொழுது தற்காலத்திய சிலர், யாரோ ஒரு விதவை தனது புனர் விவாஹ வேண்டுகோளைபத்திரிகையின் வாயிலாக வெளியிட்டிருப்பதைப் பார்த்துவிட்டு தேசம் மிகவும் முன்னேற்றத்தை அடைந்துவிட்டதாகப் பெரிய சபைகளில் ஆ வாரத்துடன் ஆனந்தப்படுகிறார்கள். அந்த விதவை முன்னிழந்த கணவனுக்கு கொள்ளிவைத்துக் கிரியை செய்தவளாயிருந்தால் மீண்டும் அவள் புனர் விவாஹம் செய்துகொண்டுவிடும்பக்ஷத்தில் அவன் கதி என்ன ? இறந்த கணவனுக்குக்கிரியை செய்யாதவள் தன்னை வர்ணதர்மத்தில் சேர்ந்தவளாக வெளியிட்டுக்கொள்வது வஞ்சனையே. இந்து தர்மசாஸ்திரம் உயிரிழந்தவனது பாகதிக்கு வேண்டிய வழியை முக்கியமாய் விதித்திருப்பதை நிராகரித்துத் தான் இப்படித்துணிவடையமுடியும். அப்படியானால் ஜாதிப்பேச்சு எங்கே? இந்த சாஸ்திரத்தை நம்பி முன்னிறந்த கணவனுக்கு சிராத்தாதிகளையும் செய்ய அவள் ஒருவாறு இஷ்டப்பட்டால் பின் வந்த புருஷன் அதை ஸம்மதிப்பானா ? 7, 8, புருஷனையிழந் தவள் இவ்வாறு சிரத்தையுள்ளவாளாயின் பின் வரும் புருஷன் எத்தனைபேர் சிராத்தத்திற்குத்தான் தேடிப்போடுவான், ஆகை யால் இந்த கெட்டவழியைவிட்டு யாவரும் நல்வழி நாடுவார் களாக. சுபம்!

பத்திராதிபர்.

பால்யவிவாகத்தடை ஆக்டு.
(CHILD MARRIAGE RESTRAINT ACT.)

இந்தியா ஜனங்களுக்கு ஸ்வாராஜ்யம் ஸம்பாதித்து புதிய ஸ்வதந்த ரங்களும் ஸௌக்கியங்களும் கொண்டுவரப்போவதாய் பொதுஜனங்க ளின் விசுவாஸத்தைக் கவர்ந்த மகாத்மாகாந்திபோன்ற மகான்களு டைய ஆதாவர்லும், பண்டித மோதிலால் நேரு போன்ற காங்கிரஸ் தலைவர்களுடையவும், ஸ்ரீமான் A. ரங்கசாமிஅய்யங்கார்போன்ற ஜன ப்பிரதிநிதிகளுடையவும், தீவிரப்பிடிவாதத்தாலும் நிறைவேறியிருப்ப தும், ஆயிரவருஷங்களின் அனுஷ்டானத்தை அரைநொடியில் கவிழ்த்து ஆஸ்திக ஜனங்களை அக்கிரம தண்டனைக்கும் அவமானத்துக்கும்ஆளாக்கி இருப்பதுமான

பால்ய விவாகத்தடைச் சட்டம்.

இச்சட்டத்தின் பெயர் "பால்யவிவாகத்தடை ஆக்டு." பிரி ட்டிஷ் இந்தியா முழுவதிலும் இதற்கு அமுல் உண்டு. 1930ஹு ஏப்ரல் 1வ முதல் இது ஊர்ஜிதத்துக்கு வரும்.

2. இந்தச் சட்டத்தின்படி:—

(a) பதினெட்டு வயதுக்குக் கீழ்பட்ட ஆண்பிள்ளையும்,பதி னாலு வயதுக்குக் கீழ்பட்ட பெண்ணும், 'பாலர்" என்று கருதப் படும்.

(b) தம்பதிகளில் ஒருவரோ இருவருமோ "பாலரா"யிரு ந்தால் அது பால்யவிவாஹமாகும்.

(c) "விவாஹம்பண்ணிக்கொள்ளுகிறவர்" வதூவரர்கள் ஆவார்கள்.

(d) "மைனர்" என்றால் பதினெட்டு வயதுக்குட்பட்ட புருஷன் அல்லது ஸ்திரீ.

3. பதினெட்டு வயதுக்குமேல் இருபத்தொரு வயதுக்குட் பட்ட புருஷன் ஒருவன் பால்யவிவாஹம் (அதாவது பதினாலு வயதுக்குட்பட்ட பெண்ணை விவாஹம்) பண்ணிக்கொண்டால் அவனுக்கு ஒரு ஆயிரம் ரூபாய் வரை அபராதம் போடலாம்.

குறிப்பு:— இதில் காவல் தண்டனை கிடையாது. (கீழே 7-வது ஸெக்ஷன்படி) அபராதம் செலுத்துவதற்குப்பதிலாகவும் காவல்தண்டனை விதிக்கக்கூடாது.

4. இருபத்தொரு வயதுக்குமேற்பட்ட புருஷன் ஒருவன் பால்யவிவாஹம்பண்ணிக்கொண்டால், அவனுக்குஒருமாதம்வரை சாதாரணக் காவலோ, ஒரு ஆயிரம்வரையில் அபாரதமோ இரண்டுமோ விதிக்கலாம்.

5. யாதானுமொரு பால்யவிவாஹத்தைப் பண்ணுகிறவர், நடத்திவைக்கிறவர், அல்லது நடக்கும்படியாக ஏவுகிறவர் ஒவ்வொருவரும் நடந்தது பால்யவிவாஹம் அல்ல என்று தான் நம்பும்படி காரணம் இருந்ததாக அவரே ருஜூப்பிக்காதபக்ஷத்தில், ஒருமாதம் வரை ஸாதாரணக்காவலுக்கோ ஒரு ஆயிரம் ரூபாய் வரை அபாரதத்துக்கோ அல்லது இரண்டுக்குமோ உள்ளாவார்கள்.

குறிப்பு:— நடந்தது குற்றமல்லவென்று சாட்டப்பட்டவர் ருஜூப்பிக்கவேண்டுமாம். எல்லாருமறியக் கொலைபண்ணினவன்கூடக் கோர்ட்டில் குற்றஞ்சாட்டப்பட்டுநின்றால், பிராஸிக்யூஷன்தரப்பில் ஸரியானபடி ருஜூவிட்டால் ஒழிய அவனை நிரபராதியென விடுதலைசெய்யப்படும். இதுதான் இதரவிஷயங்களில் பிரிட்டிஷ் சட்டநீதி. இந்த பால்யவிவாக விஷயத்தில்மாத்திரம் சீர்திருத்த வெறிகொண்டவர்கள் அந்த நீதியைப் புரட்டிவிட்டார்கள்.

6. மைனராக இருக்கும் ஒரு புருஷனோ பெண்ணோ பால்யவிவாகம் பண்ணிக்கொண்டால் அந்த மைனர் யார் ஆளுகைக்குட்பட்டிருக்கிறாரோ அப்படிப்பட்டவர் பெற்றோராயிருந்தாலும் சரி, கார்டியனாயிருந்தாலும் சரி, வேறு சட்டப்படியோ, இன்றியோ, எந்த முறைமையில் மைனரைக் காப்பவராக இருந்தாலும் ஸரி அவர் பால்யவிவாகம் நடக்கும்படி எவ்விதத்திலாவது ஸாதகமாயிருந்தாலும், அனுமதிகொடுத்தாலும், அல்லது அசட்டையாக அந்த விவாகம் நடக்கவொட்டாமல் தடுக்காமலிருந்தாலும், அவரை ஒருமாதம்வரை சாதாரணக்காவல் விதித்தோ, ஒரு ஆயிரம் ரூபாய்வரை அபாரதம்போட்டோ, அல்லது இரண்டுவகையிலுமோ தண்டிக்கலாம்.

ஆனால் இந்த ஸெக்ஷன்படி ஸ்திரீஜாதியான குற்றவாளிக்குச் சிறைதண்டனை விதிக்கக்கூடாது.

குறிப்பு:— ஒரு 17-வயதுள்ள பையன் திருடியோ அல்லது தீவட்டிக்கொள்ளையிற் சேர்ந்தோ அல்லது ஒருகொலையேசெய்தோ, குற்றம்பண்ணினதாக வைத்துக்கொள்வோம். அப்போதுகூட அந்தப் பையனின் பெற்றோர்களோ, கார்டியனோ, அப்படிச்செய்வதை "அசட்டையினால் தடு

க்கவில்லை என்ற ஒருகுற்றம் அவன்மேல் சுமத்தப்படமுடியாது. இது பினல்கோட் (Penal Code) சட்டம், ஆனால் பால்யவிவாஹம் என்னும் மகாபாதகத்தைத் தடுக்க பெற்றோனும் கார்டியனும் கடமைப்பட்டவன். இல்லாவிட்டால் ஜயில்தண்டனை. இதுவே இப்போது ஸ்வராஜ்யக்கக்ஷிப் பிராக்யர்கள், தேசபக்தர்கள், ஜனரக்ஷகர்கள் ஏற்படுத்தியிருக்கும் நீதி.

(2) எந்தவிவாஹத்திலாவது சம்பந்தப்பட்ட தம்பதிகள் இருவரில் ஒருவர் மைனராக இருக்கும்பக்ஷத்தில், அந்த மைன ரைப்பாதுகாத்துவரும் மனிதன் அந்த விவாஹத்தை "அசட்டை யினால்" தடுத்துவிடத் தவறினதாகக் கோர்ட்டார் வேறு ருஜு இல்லாமலே நிச்சயித்துக்கொள்ளவேண்டியது. அவ்விதம் அல்ல வென்று அந்தப்பெற்றோனோ கார்டியனோ ருஜுப்பித்தாலொழிய குற்றவாளியாவான்.

குறிப்பு:— இந்த ஸெக்ஷன் முதல்பாகத்தில் எது அநீதியானஅக்கிர மம் என்று மேலே காட்டப்பட்டிருக்கிறதோ அது இந்த இரண்டாவது பாகத்திலும் அமைந்திருக்கிறது.

7. 3-வது செக்ஷன் கீழ் அபராதம் மாத்திரம்.

1897-ஹூத்து பொதுநிபந்தனைகள் ஆக்டு (General Clauses Act) 25-வது செக்ஷன்படிக்காவது, இந்தியன் பினல் கோட் (Indian Penal Code) 64-வது செக்ஷன்படிக்காவது இந்த ஆக்டின் 3-வது ஸெக்ஷன்படி தண்டனைக்குள்ளாகும் எந்த குற்றவாளிக்கும் விதித்த அபராதத்தைச் செலுத்தத் தவறினால் அதற்குப்பதிலாக சிறைக்காவல் விதிக்கக்கூடாது.

குறிப்பு:— விலக்கப்பட்ட இரண்டு ஆக்டுகளிலும் அபராதம்போடப் பட்டவன் தொகை செலுத்தாவிட்டால் அதற்கீடாக சிறைவாசம் இவ்வ ளவு காலம்வரை விதிக்கலாமென்று கண்டிருக்கிறது.

8. யார் விசாரிக்கலாம்:—

இந்த சட்டத்தின்படி குற்றங்களைப்பற்றி ஜில்லா மாஜி ஸ்ட்ரேட்டோ அல்லது ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டோதான் (Pre sidency Magistrate) பிரியாது ஏற்றுக்கொள்ளவோ விசாரணை செய்யவோ அதிகாரம் உண்டு.

9. காலாவதி:—

எந்த விவாஹசம்மந்தமாய் இந்த ஆக்டின்கீழ் குற்றம் நடந்த தாக சாட்டப்படுகிறதோ அந்த விவாஹம் நடந்த ஒரு வருஷத் திற்குள் பிரியாதுகொடுத்தால்தான் செல்லும்.

10. பூர்வ விசாரணை:—

இந்த ஆக்டின்படி பிரியாது ஏற்றுக்கொள்ளும் கோர்ட்டார், கிரிமினல் ப்ரொஸீஜர் கோர்ட் 203-வது ஸெக்ஷன்படி அந்த பிரியாதை முதலெடுப்பிலேயே தள்ளிவிட்டாலன்றி, ஷை கோட் 202-வது செக்ஷன்படி தானேயாவது அல்லது வேறு முதல்வகுப்பு மாஜிஸ்திரேட்டைக்கொண்டாவது, பூர்வவிசாரணை பண்ணலாம். அல்லது பண்ணுவிக்கலாம்,

குறிப்பு:— கிரமவிசாரணை ஆரம்பிக்குமுன் பிரியாதில் ஏதாவது நிஜமிருக்கிறதாவென்று கண்டுகொள்ள "பூர்வ விசாரணை" ஒன்று செய்ய அதிகாரமுண்டு.

(1) பிரியாது கொடுக்குமுன் ஜாமீன்:—

பிரியாதை ஏற்றுக்கொண்டபின் எதிரிக்குச் சம்மன் அனுப்புமுன் ஒருவேளை குற்றம் ருஜுவாகாமல்போய் எதிரிக்கு நஷ்டஈடு கொடுப்பதற்காகப் பிரியாதுகொடுத்தவன் தன் சொந்த பொறுப்பிலோ, அல்லது இதரர்கள் பொறுப்பும் சேர்த்தோ, கோர்ட்டார் அபேக்ஷிக்கிறபடி 100-ரூபாய்க்கு கோர்ட்டார் குறிப்பிடும் கெடுவுக்குள் ஜாமீன் எழுதிக்கொடுக்கவேண்டும்; கெடுவுக்குள் ஜாமீன் கொடாவிட்டால் பிராதைத் தள்ளிவிடவேண்டும்

குறிப்பு:— இதில் சொல்லியிருப்பது ரொக்கஜாமீனல்ல, ஜாமீன் கடுதாசிதான்.

(2) மேலே 1-வது பிரிவுப்படி வாங்கும் ஜாமீன்தொகையை வசூலிக்கநேரிட்டால், கிரிமினல் ப்ரொஸீஜர் கோட்டில் கண்டிருக்கிறபிரகாரம் வசூல்செய்யலாம்.

டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் கூற்று.

இவர் சாரதாசட்டம் என்ற தலையங்கத்துடன் 9-1-30 வியாழக்கிழமை சுதேசமித்திரனில் எழுதியிருக்கிற விஷயத்தைக் குறித்துச் சற்று ஆலோசித்து நமது ஆஸ்திகர்கட்கோர் விக்ஞாபனம் செய்யவேண்டி இப்போது இறங்குகிறேன். இவர் இப்போதுமட்டுமல்ல இதற்கு முன்னும் சிற்சில சமயங்களில் இவ்விதம் எழுதிக்கொண்டிருக்கிறார். இங்கு ஓர் சந்தேகம், இவர் எழு

தும் விஷயம் அப்போதப்போது ஹிந்துபத்திரிகையிலும், மித்திரனிலும்வெளிவருகிறது. எழுதுபவரே இருபாஷையிலும் எழுதுகிருரா. அல்லது உத்தமமான இவ்விஷயம் தமிழறியும் ஸகோதர ஸகோதரிகளுக்கும் விளங்கட்டுமென்று பரம கருணையுடன் பத்திரிகாலய அதிபரே சிரமம் வகித்து மொழிபெயர்த்துப் பிரசுரிக்கிருரா? பத்திராதிபர்காரியமென்ருல் அவரது பரமசிரத்தை இதினின்றும் வெளியாகிறது. எழுதுபவரே அப்படிச் செய்கிருரென்ருல் முன்னெரு தடவை சாரதாசட்டத்தால் வரும் அனர்த்தங்களை பற்றி விஸ்தாரமாய் ஆங்கிலத்திலெழுதியும் அதன் சுருக்கத்தை தமிழில் மொழிபெயர்த்தும் முறையே ஹிந்துவிலும் மித்திரனிலும் பிரசுரிக்குமாறு ஸ்ரீமான் மதுரைஅட்வோகேட் N. நடேசய்யர் அவர்கள் விஷயம் அனுப்பியதில் அதில் தமிழில் மட்டிலும் மித்திரனில் பிரசுரம் செய்து இங்கிலீஷை நிறுத்திவிட்டனர். அதன் காரணமென்னவென்று அய்யரவர்கள் கேட்டதில் இரண்டிலும் விஷயம் ஒன்றேயானதால் இங்கிலீஷில் வேண்டாமென்று நிறுத்தினேனென்று பதிலளித்தார். உண்மையில் ஆங்கிலத்தில் பிரசுரம் செய்திருந்தால் சீர்திருத்தக்காரப்புலிகளுக்கு ஓர்பெரிய வாயடைப்பாயாகுமென்றே நிறுத்திவிட்டார்போலும் என்று ஊஹிக்க இடம் இருக்கிறது. இது இவ்விதமிருக்க இப்போது ராஜன் விஷயம் மட்டிலும் இரண்டு பேபரிலும் பிரசுரிக்கக் காரணம் யாது? இரண்டும் ஒரு விஷயமல்லவோ. எப்படியாவது இருக்கட்டும். இதில் பத்திராதிபரது மனம் எவ்வாறிருக்கிறதென்பது விளங்கும். இனி டாக்டர் விஷயத்தைக் கவனிப்பாம். இவர் ஒவ்வொரு தடவையிலும் புதிதுபுதிதாய் விஷயமொன்றும் கூறிவிடவில்லை, ஒரே பிடியாய் வேதசாஸ்திர நிந்தையைத்தவிர வேறு விஷயமில்லை. இங்கு இவரது கூற்றுக்கு மறுப்பு எழுதுவதாய் நான் இங்கு இறங்கவில்லை, இவருக்கு பதில் கூறுவதாயிருந்தால் மித்திரனுக்கே எழுதவேண்டும். மித்திரனே நம் விஷயத்தை ஏற்கவே மாட்டாது என்று கொண்டேசும்மாவிருந்தபோதிலும் முன் கூறியதையே மீண்டும் மீண்டும் கூறுகிறதை மித்திரன ஆனந்தத்தோடு ஒற்றுப் பிரசுரிக்கிறதே. இதுபோன்ற விஷயங்களை அடிக்கடி பிரசுரிக்க சலிக்காமல் இடம் கொடுப்பதுபோல் இதன் மறுப்புக்கு ஒரு முறையாவது இடம்கொடுக்கும் பத்திரிகை நம்முள் இல்லையே என்ற மனத்தாங்கலுடன் ஏதாவது நமது ஆர்யதர்மத்திலாவது எழுதிவைப்போமென்றுகொண்டு முன்வந்தேனே தவிர வேறல்ல. (தொடரும்.)

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி, மதுரை.

ஆகையால் வேதங்களில் மானஸவ்யபிசாரதோஷபரிஹாரத்துக்குப் பிராயச்சித்தமாக இந்த மந்திரத்தால் சிராத்தத்தில் ஹோமம் செய்யவேண்டும் என்று விநியோகம் செய்திருப்பதால் அதையனுஸரித்துத்தான் முன்காலத்திலும், தற்காலத்திலும் ஆசாரம் ஏற்பட்டதேயன்றி முன்னோர்களுடைய கற்பனுவிசேஷத்தால் அல்ல.

சுருதிகளும் இவ்விதம் ஸ்திரீகளிடத்தில் வ்யபிசாரத்தைத் தோஷமாகக் கூறுவது தவறேயென்றால் சுருதிகளிடம் ஸம்சயப்படும் தங்களுடன் வ்யவஹாரம் செய்வது ஆஸ்திகர்களுக்கு அழகல்ல. ஆகையால் ஸ்திரீகளைத் தோஷமின்றி பாதுகாத்துக்கொள்வதற்காகவும், பரலோகபலத்திற்காகவும், சுருதிஸ்மிருதிகளில்ஸதிரீ தோஷம் நிரூபிக்கப்பட்டிருப்பதால் அதை ஆக்ஷேபித்து அங்கீகரிக்காமலிருக்க முடியாது.

ஸ்திரீகளுக்கு வ்யபிசாரதோஷம் சாஸ்திரஸித்தமென்று சம்பாவனை (ஊஹம்) பண்ணிக்கொண்டாலும் ஒவ்வொரு மாதத்திலும் ஏற்படும் ரஜோநிர்கமத்தால் (சோணிதம் வெளிப்படுதலால்) பரமபரிசுத்தர்களாக அவர்கள் ஆகிவிடுகிறார்கள் என்று சிலர் தர்மோபதேசம் பண்ணுகிறார்கள். ஸ்திரீகளுக்கு ரஜோநிர்கமனத்தால் சுத்தியையறிவிக்கும் "ஸ்திரீகள் பரமபரிசுத்தர்கள் ஒரு காலத்திலும் இவர்கள் தோஷத்தை அடைவதில்லை. ஏனென்றால் மாதந்தோறும் வெளிவரும் ரஜஸ்ஸே (சோணிதமே) இவர்களுடைய தோஷங்களை நசிக்கும்படி செய்கின்றது.'' என்ற ஸ்மிருதி வசனமும் கூட இவ்விஷயத்தில் பிரமாணமாகும். அன்றியும் "ஸமான ஜாதியாக இல்லாத பரபுருஷனால் ஸ்திரீகளுக்குக் கர்ப்போத்பத்தியுண்டாகும்பக்ஷத்தில் அந்தஸ்திரீகள் அக்கர்ப்பத்தைப் பிரஸவிக்கும் வரையிலும் அசுத்தர்களாகவே ஆவார்கள். கர்ப்பம் வெளிப்படுமேயானால் அக்கர்ப்பநிர்கமத்தாலும் அதற்கு பிறகுஏற்படும் ரஜோதர்சனத்தாலும், களங்கமற்றத்தங்கம்போல் சுத்தியை அடைந்துவிடுகிறார்கள்'' என்ற ஸ்மிருதி வாக்யத்தால் ஸ்திரீகளுக்கு ஜாதிவேற்றுமையுள்ள புருஷருடன் ஸம்ஸர்க்கம் ஏற்பட்டாலும், கர்ப்பம் உற்பத்தியடைந்தாலும், அக்கர்ப்பமிருக்கும் அளவுதான் தோஷம். அக்கர்ப்பம் வெளிப்படுமேயானால் அதனாலும், அதற்கடுத்த ரஜோநிர்கமநத்தாலும் அவர்களுக்குத்

தோஷம்விலகி சுத்தியேற்பட்டுவிடுகின்றது என்றும் மற்றும் சிலர் தர்மோபதேசம் செய்கிறார்கள்.

இவ்விரு பக்ஷமும் சரியானதல்ல. இவர்கள் தமக்குப் பிரமாணமாக எடுத்துக்காட்டிய ஸ்மிருதிவசனங்களனைத்தும் ஸ்திரீகளை ஸ்துதிசெய்யும் விஷயத்தில் தாத்பர்யமுள்ளவைகளாதலால் அர்த்தவாத ரூபமாகிய அவ்வசனங்களைக்கொண்டு அனேக விதி வாக்கியங்களால் அறிவிக்கப்படும் வ்யபிசாரதோஷத்தை ஸ்திரீகளுக்கு இல்லையென்று மறுப்பதற்கு முடியாது. இவர்கள் எடுத்துக் காட்டிய இவ்வசனங்களும் கூட "ஸ்திரீகளுக்கு வ்யபிசார தோஷம் இல்லை"யென்று கூறவில்லை. "கர்ப்பநிர்கமம் ஏற்படும் வரையிலும் அந்த ஸ்திரீ தோஷமுள்ளவளேயாவாள்" என்பதால் பரபுருஷ ஸம்பந்தத்தாலும், கர்ப்போத்பத்தியாலும், அசுத்தி இவர்களுக்கு உண்டென்னும் விஷயத்தையே இவ்வசனமும் ஸ்பஷ்டமாய் உரைக்கின்றது. ஆனால் அந்த தோஷத்திற்கு கர்ப்பவிமோசன காலத்தை அவதி (எல்லை) காலமென்றும், ரஜோநிர்கமனத்தால் நிவர்த்தியுண்டென்றும் இவ்விரு விஷயங்களை அதிகமாகவும் ப்ரதிபாதனம் பண்ணுகிறது. இவ்வசனங்களில் சொல்லப்படும் இவ்விரு விஷயங்களும் "ஸ்திரீகளின் ஸ்துதிரூபமென்று நாங்கள் சொல்லுகின்றோம். அன்றியும் அசுத்தி, சுத்தியென்ற இவ்விரண்டும் ஒவ்வொன்றும் திருஷ்டம், அதிருஷ்டம்என்றிரண்டு விதமாக இருக்கின்றது. (திருஷ்டாசுத்தி, அதிருஷ்டாசுத்தி, திருஷ்டசுத்தி அதிருஷ்டசுத்தி என நான்கு விதம்) அவற்றில் பரபுருஷ ஸம்பந்தத்தால் அவனுடைய வீர்யம் கர்ப்பம் முதலியவைகள் ஸதிரீகளின் சரீரத்தில் தங்கி நிற்பதுதான் திருஷ்டதோஷம் எனப்படும். அதிருஷ்டதோஷமோவென்றால், ச்ரௌதஸ்மார்த்தாதி கர்மாக்களில் அதிகாரத்தை அடியோடு அழித்துவிடக்கூடியதும், அசாஸ்திரீயமாகிய பரபுருஷ சம்பந்தமென்ற வ்யபிசாரத்தால் உத்பத்தியடைந்ததும், சாஸ்திரங்களால் மட்டிலும் அறியக்கூடியதுமான பாபவிசேஷமேயாகும். இவ்விரண்டுவித தோஷங்களுக்குள் கர்ப்பபரித்யாகம் ரஜோநிர்கமம் முதலிய திருஷ்ட (ப்ரத்யக்ஷமாயுள்ள) காரண விசேஷங்களால் ஸ்மிருதிமூலமாகவே ஏற்படும் ஸ்திரீகளின் திருஷ்டசுத்தியால் திருஷ்டதோஷம் நிவர்த்தித்து விடுமேயன்றி அதிருஷ்டதோஷம், நிவர்த்தித்துவிடாது. சாஸ்திரவிஹிதமற்ற "வ்யபிசாரம்" முதலியகாரியங்களை அனுஷ்

டிப்பதால் ஏற்படும் திருஷ்டதோஷமானது ப்ராயச்சித்தரூபமாக சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கும் காரியங்களை அனுஷ்டிப்பதால் உண்டாகும் அபூர்வமென்ற அதிருஷ்ட விசேஷத்தாலேயே தான் நிவர்த்திக்கக் கூடும். கிருச்ரம் முதலிய ப்ராயச்சித்த கர்மாக்களினின்றும் அதிருஷ்டவிசேஷம் உண்டாகுமென்பது சாஸ்திரப்பிரமாண ஸித்தமாக இருப்பதுபோல் கர்ப்பத்யாகம், ரஜோநிர்கமனம் முதலிய காரியங்களாலும் அதிருஷ்டதோஷத்தை அகற்றக் கூடிய அதிருஷ்டபரிசுத்தியும்உத்பன்னமாய்விடுகின்றதென்பதற்கு சாஸ்திரப்ரமாணம் இருக்குமானால் கர்ப்பம், ரஜஸ், இவைகளின் நிர்க்கமத்தாலேயே அதிருஷ்டதோஷமும் அகன்று விடுவதாக அங்கீகரித்துவிடலாம். அத்தகைய ப்ரமாணவசனம் யாதொன்றும் இல்லவேயில்லை. இக்காரணத்தைக்கொண்டுதான், மேற்கண்ட ஸ்மிருதிவசனத்திலும்கூட "அவர்கள்சுத்தியையடைகிறார்கள்" என்று வர்த்தமான காலத்தை அறிவிக்கும் ப்ரத்யயத்து(விகுதியு) டன்கூடிய பதத்தாலேயே சுத்தியுண்டென்று ஸாமான்ய ரூபமாக அறிவிக்கப்படுகிறதேயன்றி "அவர்கள் சுத்தியை அடைவார்கள்" என்று அதிருஷ்டத்தை அறிவிக்கும் லிங், லோட் முதலிய விதிசப்தங்கள் யாதொன்றும் அங்கு இல்லை. அன்றியும் மீண்டும் இஃது தத்துவம்- ஸ்திரீகளுக்கு ரஜோநிர்கமனத்தால் ஏற்படுகின்ற சுத்தியென்பதும், மானஸவ்யபிசாரதோஷத்தை மட்டிலும் நசிக்கச்செய்யுமேயொழிய வாக்காயங்களால் ஸம்பவிக்கும் வ்யபிசாரதோஷத்தை விலக்கிவிடமாட்டாது.

இவ்வண்ணமே மனுவும் சுத்திப்ரகாணத்தில் மலம் முதலிய அசுத்தியுள்ள வஸ்துக்கள் மண், ஜலம், இவைகளாலும், எச்சில் முதலிய அசுத்திதோஷமுள்ள நதீப்ரவாகமானது வேகத்தாலும் சுத்தியடைகின்றன. மானஸ வ்யபிசாரதோஷத்துடன்கூடிய ஸ்திரீகள் மாதந்தோறும் உண்டாகும்ஆர்த்தவத்தாலும், பாபியாகவுள்ள ப்ராமணன் ஸன்யாஸத்தாலும், சுத்தியடைகின்றார்கள் என்று கூறியுள்ளார். இம்மனுஸ்மிருதி வசனத்தாலேயே எந்த ஸ்மிருதிவசனங்கள் "மானஸம்" என்று விசேஷித்துக் கூறாமல் ஸாமான்ய ரூபமாகவே வ்யபிசாரதோஷத்துக்கு ரஜோநிர்கமத்தால் நிவர்த்தியுண்டென்று கூறுகின்றனவோ, அந்த ஸ்மிருதி வசனங்களுங்கூட இம்மனுவசனத்தை அனுசரித்து "மானஸவ்யபிசாரதோஷம்தான் ரஜோநிர்கமத்தால் விலகும்" என்று தோஷ

விசேஷத்தில் தான் தாத்பர்யம் என்பதும் ஸித்தித்துவிடுகின்றது. ஏனென்றால் ஸாமான்யமாக வ்யபிசாரதோஷம் ரஜஸ்ஸால் நிவர்த்தித்து விடுமென்ற ஸ்மிருதிகள்ஸாமான்யரூபமாகப்பிரவர்த்தித்து இருப்பதால் ஸாமான்ய சாஸ்திரமென்றும் மனுஸ்மிருதி வசனமானது "மானஸ வ்யபிசாரதோஷம் ரஜஸ்ஸால் விலகு" மென்று விசேஷரூபமாகவும் ப்ரவர்த்தித்திருப்பதால் விசேஷ சாஸ்திரம் என்றும் நியாயசித்தமாகையால் விசேஷசாஸ்திரத்தையனுசரித்து ஸாமான்ய சாஸ்திரத்திற்கு அர்த்த நிர்ணயம் செய்துகொள்வது அவச்யமன்றோ? இக்கருத்தை அனுசரித்துத்தான், "வ்யபிசாரதோஷம் ரஜோதர்சனத்தாலும், கர்ப்பதாரணதோஷம், அக்கர்பத்தின் பரித்யாகத்தாலும், நசித்துவிடும்" என்ற யாக்ஞவல்க்ய ஸ்மிருதிவசனத்திலிருக்கும் வ்யபிசாரமென்ற பதத்திற்கும் "வ்யபிசார விசேஷமாகிய மானஸவ்யபிசாரம்" என்பது பொருளாகுமென்று விக்ஞானேசுவரர் முதலிய அதனுரையாசிரியர்கள் வ்யாக்யானம் செய்து இருக்கிறார்கள். அன்றியும், ஸ்திரீகளுக்கு வ்யபிசாரதோஷம் ரஜோநிர்கமத்தால் அடியோடு விலகுமென்றிவ்வாறு ஸ்திரீசுத்தியை எந்த வஸிஷ்டர் தமது ஸ்மிருதியில் கூறியுள்ளாரோ? அவரே இருபத்தொன்றாமத்தியாயத்தில் "ஸ்திரீகளுக்கு மானஸவ்யபிசாரதோஷம் ஸம்பவித்துவிடும்பக்ஷத்தில் நான்குதினங்களில் செய்யக்கூடிய ப்ராயச்சித்தத்தை அனுஷ்டிக்கவேண்டுமென்று பகன்றுள்ளார். அதாவது "ஸ்திரீகள் மானஸவ்யபிசாரதோஷத்தை அடையும் பக்ஷத்தில் மூன்று நாட்கள் க்ஷீரான்ன போஜனம்செய்துகொண்டு பூமியிலேயேபடுத்துக்கொள்ளவேண்டும். நான்காவதுநாள் விடியற்காலத்திற் ஸ்னானம்செய்துகொண்டு ஸாவித்திரீ மஹாமந்திரத்தாலும், காயத்திரீசிரஸாலும் நூற்றெட்டு ஹோமம் செய்தால் சுத்தியேற்படுமென்று தெரிகின்ற" தென்று. இவ்வாறாக இந்தவஸிஷ்டர் இப்பிராயச்சித்தத்தை எதற்காக விதிக்கவேண்டும்? ரஜோநிர்கமத்தாலேயே ஸ்திரீகள் சுத்தியை அடைந்து விடுவதாக இவர் கூறிவிட்டாரே? ஆகவே அதற்காக இவர் பிராயச்சித்தம் விதிக்கவேண்டியதில்லை. இங்ஙனம் இருக்க ஸ்திரீகளுக்கு மானஸ வ்யபிசாரதோஷமும் பிராயச்சித்தம் செய்துகொள்ளாமல் ரஜோநிர்கமத்தால் மாத்திரம் நிவர்த்திக்கமாட்டாதென்பது இவருக்கு அபிமதமென்று ஸித்திக்கின்றதல்லவா? வாக்காயங்களால் உண்டாகும் வ்யபிசாரதோஷம்

அல்லது மறுநாள் செய்யப்படவேண்டும். சிலவிடங்களில் ராத்திரியையும் சிராத்தத்திற்கு கௌணகாலமாக விதித்திருப்பதால் தோஷம் நீங்கியபின் இரவுகளிலும் செய்யலாம். (ஆனால்) கிரஹணநிமித்தம் செய்யப்படுகிற உபாகசிராத்தமொழித்து மற்றைய சிராத்தங்களை இரவிற் செய்யக்கூடாதென்று தடுக்கப் பட்டிருப்பதை அறிந்துகொள்க. (41½)

सूर्यग्रहे तु नाश्नीयात् पूर्वं यामचतुष्टयम् ॥४२॥

ரவிக்ரஹணத்தில் ஸ்பரிசத்திற்கு நான்கு யாமங்களுக்குமுன் னிருந்தே போஜனம் செய்யக்கூடாது. (42)

चन्द्रग्रहे तु यामांस्त्रीन् बालवृद्धातुरान्विना ।

சந்திரக்கிரஹணத்தில் ஸ்பரிசகாலத்திற்குமுன் மூன்று யாமங்கள் போஜனத்தைவிலக்கவேண்டும்.(யாமமென்பது ஏழரை நாழிகையளவு.) இந்த விதி வயதுமுதிர்ந்தவர்களுக்கும் குழந்தைகளுக்கும் ரோகிகளுக்கும் ஏற்பட்டதல்ல. (42½)

सन्ध्याकाले यदा राहुर्ग्रसते शशिभास्करौ ॥४३॥
तदहर्नैव भुञ्जीत रात्रावपि कदाचन ।

ஸந்தியாகாலத்தில் சூர்யசந்திரக்ரஹணங்கள் நேர்ந்தால் அன்று பகலும் இரவும் போஜனம் செய்யக்கூடாது. (43½)

ग्रस्तोदये विधोः पूर्वं नाहोभोजनमाचरेत् ॥४४॥

சந்திரன் கிரஸ்தோதயமாயின், கிரஹணத்துடன் உதித்தால், அன்று பகல் சாப்பிடக்கூடாது. (44)

ग्रस्तावेवास्तसंयोगं रवीन्दू प्राप्नुतो यदि ।
परेद्युरुदये स्नात्वा भुञ्जीतेति विनिर्णयः ॥४५॥

ரவியேனும் மதியேனும் கிரஹணத்துடனேயே அஸ்தமனமடைந்தால் க்ரஸ்தாஸ்தமனமடைந்த க்ரஹம் மறுநாள் உதயமானபிறகு ஸ்நானஞ்செய்து புஜிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. (45)

इति वृद्धवसिष्ठाद्यैर्भोजनं तु निवारितम् ।

இவ்வாறுக விருத்தவஸிஷ்டர் முதலிய முனிவர் போஜனத்தைத் தடுத்திருத்தல் காண்க. (45½)

सौरे यत्र दिनं शून्यं तदा चान्द्रविधानतः ॥ ४६ ॥
पूर्वमासे कृतं चेत्स्यात् पितॄणां तृप्तिकारकम् ।

ஸௌரமான விதிப்படி திதி கிடைக்காவிட்டால் பூர்வமாஸத்திய சாந்திரதிதியில் சிராத்தம் செய்தால் பிதுருக்களுக்குத் திருப்தியை விளைவிக்கும். (46½)

वृश्चिकादित्रिमासेषु मृताहो न भवेद्यदि ॥ ४७ ॥
पूर्वमासि तिथौ कुर्यान्मासिकं चाब्दिकं तथा ।

கார்த்திகை முதலிய மூன்று ஸௌரமாஸங்களில் ம்ருததிதி நேரிடாமலிருப்பின் முன்மாஸத்திய (சாந்திர) திதியிலேயே மாஸிகத்தையும் ஆப்திகத்தையும் செய்தல் வேண்டும். (47½)

ऊर्ध्वं मुहूर्तात्कुतपात् संक्रान्तिर्यदि दृश्यते ॥४८॥
पूर्वे मासि न कर्तव्यं कुर्यात्प्राक्कुतपाद्यदि ।
इति व्यवस्थितिं प्राहुः हारीताद्या महर्षयः ॥४९॥

ஆனால் ஸங்கிரமணம் குதபகாலத்தினின்றும் இரண்டு நாழிகைக்குப் பிறகே நேர்வதாகில் அன்றைய திதிசிராத்தத்தை முன்மாஸத்தில் செய்யக்கூடாது. ஹாரீதர் முதலிய முனிவர்கள் இவ்விதம் நிச்சயித்திருக்கின்றனர். (49)

उभयोर्दिनयोर्व्याप्ता यदि स्यादेकिका तिथिः ।
मासिके चाब्दिके चैव तिथिर्ग्राह्याऽऽपराह्णिकी ॥५०॥

ஒரே திதி இரண்டுநாட்களில் வியாபித்திருந்தால் அபரான்ன வ்யாப்தியுள்ளதினத்திலேயே மாஸிகத்தையோ ஆப்திகத்தையோ செய்யவேண்டும்.

उभयत्र तथात्वे तु महत्त्वेन विनिर्णयः ।

இரண்டு நாட்களிலும் ஒரு திதிக்கு அபரான்ன வ்யாப்தியிருப்பின் அபரான்ன வ்யாப்தி அதிகமிருக்கும் நாளில் சிராத்தம் செய்க. (50½)

समत्वे पूर्वविद्धैव ह्यतथात्वेपि सा यदि ॥ ५१ ॥
त्रिमुहूर्ता भवेत्सायं सर्वेषोऽयं विनिर्णयः ।
त्रिमुहूर्ता नचेद्ग्राह्या परैव कुतपेहि सा ॥ ५२ ॥
इति सस्मार भगवान् गोभिलो मुनिसत्तमः ।

இரண்டு நாட்களிலும் அபரான்னவ்யாப்தி ஸமமாகவிருப்பின் முன் நாளிலேயே செய்க. இவ்வாறே ஒரு திதி மறுநாள் அபரான்ன வ்யாப்தி இல்லாதிருப்பினும் முதனாள் சூர்யாஸ்தமனத்திற்கு ஆறு நாழிகைகளுக்கு முன் தொடங்குமாகில் முதல் நாளையே எடுத்துக்கொள்க. அவ்வாறு தொடங்காவிடில் அந்த திதியை மறுநாளே அநுஷ்டிக்கவேண்டும். ஏனெனில் அதற்கு குதபவ்யாப்தி இருக்கிறதன்றோ! என்று முனிமுதல்வரான கோபிலர் உரைத்தார். (52½)

द्वेधा त्रेधा चतुर्थाच पञ्चधा नवधापिच ॥५३॥
तथैव पञ्चदशधा दिवसस्य विभक्तयः ।

இருபங்கு, முப்பங்கு, நாலுபங்கு, ஐந்து, ஒன்பது, பதினைந்து பங்குகள் என பகற்பொழுதுபலவாறுகப் பரிக்கப்பட்டுக் காண்கிறது. (53½)

आवर्तनात्तु पूर्वाह्णो ह्यपराह्णस्ततः परः ॥ ५४ ॥
इति स्कान्दपुराणेन दिवसस्तु द्विधाकृतः ।

பூர்வான்னம் அபரான்னம் என பகலை இரு பங்காக ஸ்கந்த புராணம் கூறுகிறது. (54½)

यथा चैवापरः पक्षः पूर्वपक्षाद्विशिष्यते ॥ ५५ ॥

சிராத்தானுஷ்டானத்திற்கு அபரபக்ஷமே சிறந்ததென்பது போல், அபரான்னமே மேலானதென்று மனுபகவான் இருபங்குகளாகவே கூறியுள்ளார். (55)

तथा श्राद्धस्य पूर्वाह्णादपराह्णो विशिष्यते ।
इति द्वेधैव मनुना भक्तं भगवता दिनम् ॥ ५६ ॥

"तस्मादहरहः पूर्वाह्णे देवा अशनमभ्यवहरन्ति, मध्यन्दिने मनुष्याः, अपराह्णे पितरः । "पूर्वाह्णो वै देवानां, मध्यन्दिनो मनुष्याणां, अपराह्णः पितृणाम्"

इति शातातपेनापि श्रुत्याचापि त्रिधा दिनम् ।
विभक्तं, एवमेवैतत् चतुर्धा प्राह गोभिलः ॥
पूर्वाह्णः प्रहरः पूर्वः, मध्याह्णः प्रहरस्ततः ॥ ५७ ॥

'ஒவ்வொரு நாளும் பூர்வான்னத்தில் தேவர்களும், மத்யான்னத்தில் மானிடரும், அபரான்னத்தில் பிதுருக்களும் ஆஹாரத்தை அருந்துகின்றனர். பூர்வான்னம் தேவதைகளுக்கு, மத்யான்னம் மானிடர்களுக்கு, அபரான்னம் பிதிருக்களுக்கு' என முறையே சாதாதபாரலும், ச்ருதியாலும் (வேதபுருஷாலும்) பகல் மூன்றுகப் பிரிக்கப்பட்டது. பூர்வான்னம், மத்யான்னம், அபரான்னம் ஸாயான்னம் என கோபிலர் நான்கு பங்குகளாகப்பிரித்தார். (57)

अपराह्णस्तृतीयस्स्यात् सायाह्नश्च ततः परम् ।
मुहूर्तत्रितयं प्रातः तावानेव तु सङ्गवः ॥ ५८ ॥
मध्याह्नस्त्रिमुहूर्तस्स्यादपराह्णोऽपि तादृशः ।
सायाह्नस्त्रिमुहूर्तस्तु सर्वकर्मबहिष्कृतः ॥ ५९ ॥
इति व्यासेन महता विभक्तं पञ्चधा दिनम् ।

ப்ராதஃகாலம், ஸங்கவம், மத்யான்னம், அபரான்னம், ஒரு கர்மத்திற்கும் உதவாத ஸாயான்னம்' என்று வியாஸமஹாமுனிவர் அவ்வாறு நாழிகைகளமைந்த ஐந்து பாகங்களாகப் பிரித்திருக்கின்றார். (59½)

प्रातरार्तः सङ्गवश्च रुग्णो मध्याह्न सन्तपौ ॥ ६० ॥
अपराह्णः खनिस्सायं नवधा भिद्यते त्वहः ।
इत्येवं नवधैकैकं विभक्तं दिनमत्रिणा ॥ ६१ ॥

ப்ராத:, ஆர்த, ஸங்கவ, ருக்ண, மத்யான்ன, ஸம்தப, அபரான்ன, கனி, சாயம்' என்று அத்ரிமுனிவர் ஒன்பதாகப் பிரித்தனர். (61)

रौद्रः श्वेत्र स्तथा मैत्र स्तथा कालकटः स्मृतः ।
सावित्रश्च जयन्तश्च गान्धर्वः कुतपस्तथा ॥६२॥
रौहिणश्च विरिञ्चश्च विजयो नैरृत स्तथा ।
महेन्द्रो वरुणश्चैव बोधः पञ्चदशस्मृतः ॥ ६३ ॥
इत्याह भगवान्शंखो पिनं पञ्चदशात्मकम् ।

ரௌத்ரம், ச்வைத்ரம், மைத்ரம், காலகடம், ஸாவித்ரம், ஜயந்தம், காந்தர்வம், குதபம், ரௌஹிணம், விரிஞ்சம், விஜயம், நைருருதம், மாஹேந்திரம், வாருணம், போதம்' என சங்கமுனிவர் பகலைப் பதினைந்தாக பங்கிட்டார். (63½